# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர்கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 1921/ 2010 / எம்சி. 8 நாள் : 25.2.2010

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சிறப்புக்கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சிறப்புக் கூட்டம் வருகின்ற 2.03.2010 செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் /

25/02/10
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

**அ) திருக்குறள்**

**ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகா றகலாக் கடை.**

**(குறள் -478)**

**விளக்கம்**

**எல்லை கடந்த செலவு இல்லாமல் இருக்குமேயானால் வரவு, குறைவாக இருப்பதால் கேடு எதுவும் விளைவதில்லை.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – குத்தகை இனங்கள் - மேற்கு மண்டலம் - தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி, மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்கெட் மற்றும் எம்.ஜி.ஆர். மார்க்கெட் - தெற்கு மண்டலம் - தியாகி குமரன் மார்க்கெட் மற்றும் இராமர் கோவில் வீதி மார்க்கெட் - மாமன்ற தீர்மானம் எண்.168 நாள் 29.12.2009 மற்றும் எண்.226 நாள்.29.01.2010-ன்படி கட்டண உயர்வு செய்யப்பட்டது – கட்டணம் மறுநிர்ணயம் செய்தல் தொடர்பாக.

-------

மாநகர மன்ற தீர்மான எண் 168 நாள் 29.12.2009 மற்றும் 226 நாள்.29.01.2010-ன்படி கீழே குறிப்பிட்ட மார்க்கெட் இனங்களுக்கு கீழ்கண்டவாறு கட்டண விகிதங்களை மாற்றி அமைத்தும், 1.4.2010 முதல் நடைமுறைப்படுத்தவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மேற்கு மண்டலம்

1. வாழைக்காய் மண்டி (தடாகம் ரோடு ) — மாநகர மன்ற தீர்மான எண்.226 நாள்.29.01.2010ன்படி

| இனம் | 2009-10 ஆம் ஆண்டு கட்டண விபரம் | மாற்றியமைக்கப்பட்ட கட்டண விபரம் |
|---|---|---|
| 1) லாரி 1-க்கு | ரூ.30.00 | ரூ.40.00 (நடை 1-க்கு) |
| 2) இரட்டை மாட்டு வண்டி 1-க்கு | ரூ. 7.50 | --- |
| 3) ஒற்றை மாட்டு வண்டி 1-க்கு | ரூ. 6.00 | --- |
| 4) டெம்போ 1-க்கு | ரூ.15.00 | ரூ.20.00 (நடை 1-க்கு) |
| 5) வாழைத்தார் 1-க்கு | ரூ. 0.35 | ரூ. 1.00 |

| புதிதாக சேர்க்கப்பட்ட இனம் | | கட்டணம் |
|---|---|---|
| 1) ஆட்டோ நடை 1-க்கு | --- | ரூ.10.00 |
| 2) இரண்டு சக்கர வாகனம் | --- | ரூ. 5.00 |
| 3) சைக்கிள் | --- | ரூ. 1.00 |
| 4) கை வண்டி நடை 1-க்கு | --- | ரூ. 5.00 |

2. மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்கெட்

| இனம் | 2009-10 ஆம் ஆண்டு கட்டண விபரம் | மாற்றியமைக்கப்பட்ட கட்டண விபரம் |
|---|---|---|
| 1) A, B,C & D பிளாக் 5 X 6 அடி | ரூ. 6.00 | ரூ. 15.00 |
| 2) லாரி நடை 1-க்கு | ரூ.30.00 | ரூ. 40.00 |
| 3) டெம்போ நடை 1-க்கு | ரூ.15.00 | ரூ. 20.00 |
| 4) இரட்டை மாட்டு வண்டி 1-க்கு | ரூ. 7.50 | --- |
| 5) ஒற்றை மாட்டு வண்டி 1-க்கு | ரூ. 6.00 | --- |
| 6) கை வண்டி 1-க்கு | ரூ. 1.50 | --- |
| 7) விற்பனைக்கு வரும் பாரம் ஏற்றிய சைக்கிள் 1-க்கு | ரூ. 3.00 | --- |
| 8) இருசக்கர வாகனம் 1-க்கு(சைக்கிள்) | ரூ. 0.75 | ரூ. 1.00 |
| 9) மொபட் ஸ்கூட்டர் முதலிய வாகனங்களுக்கு | ரூ. 1.50 | ரூ. 5.00 |
| 10) திறந்தவெளி தரை கடைகள் (6' x 6') | ரூ. 3.00 | ரூ. 10.00 |

(தரை கடைகள் 2009-10 ஏல இன அறிக்கையில் 4' x 4' ஆக இருந்ததை 6'x 6'ஆக திருத்தம் செய்து அதற்குரிய கட்டணம் மேற்படி மன்ற தீர்மானத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| 11) கீரை வகைகளில் 4' x 4' | ரூ. 1.50 | --- |
| 12) தலை சுமை மற்றும் சரக்கு மூட்டை 1-க்கு | ரூ. 1.50 | --- |
| 13) தக்காளி கூடை 1-க்கு | ரூ. 1.50 | ரூ. 1.50 |
| 14) அவரைக்காய் அடங்கிய சிறிய மூட்டை 1-க்கு | ரூ. 1.50 | --- |

<u>சேர்க்கப்பட்ட புதிய இனங்கள்</u>

| | |
|---|---|
| 1) தேங்காய் மூட்டை 1-க்கு | ரூ. 2.00 |
| 2) காய்கறி மூட்டை 1-க்கு | ரூ. 2.00 |
| 3) மளிகை சாமான்கள் அனைத்துக்கும் மூட்டை 1-க்கு | ரூ. 2.00 |
| 4) எண்ணெய், பிஸ்கட், சோப்பு, டின் 1-க்கு | ரூ. 1.00 |
| 5) பாரம் ஏற்றி வரும் இரண்டு சக்கர வாகனம் நடை 1-க்கு | ரூ. 5.00 |
| 6) ஆட்டோ நடை 1-க்கு | ரூ. 10.00 |
| 7) காளி பிளவர் லோடு 1-க்கு (லாரி / டெம்போ) | ரூ.150.00 |
| 8) பூசணிக்காய் லோடு 1-க்கு (லாரி / டெம்போ) | ரூ.200.00 |
| 9) வாழைத்தார் 1-க்கு | ரூ. 1.00 |
| 10) கை வண்டி நடை 1-க்கு | ரூ. 5.00 |
| 11) இலை கட்டு 1-க்கு | ரூ. 2.00 |
| 12) தக்காளி டிப்பர் 25 கிலோ 1-க்கு | ரூ. 3.00 |

<u>3. மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்கெட் (எம்.ஜி.ஆர் மார்க்கெட்)</u>

| இனம் | 2009-10 ஆம் ஆண்டு கட்டண விபரம் | மாற்றியமைக்கப்பட்ட கட்டண விபரம் |
|---|---|---|
| 1) லாரி நுழைவுக் கட்டணம் | ரூ.30.00 | ரூ. 40.00 |
| 2) டெம்போ 1-க்கு | ரூ.15.00 | ரூ. 20.00 |
| 3) இரட்டை மாட்டு வண்டி | ரூ. 7.50 | ---- |
| 4) ஒற்றை மாட்டு வண்டி | ரூ. 6.00 | ---- |
| 5) தக்காளி கூடை 1-க்கு | ரூ. 1.50 | ரூ. 1.50 |
| 6) தலைச்சுமை அல்லது வாழை இலை கட்டு 1-க்கு | ரூ. 1.50 | ரூ. 2.00 |
| 7) சரக்கு மூட்டை 1-க்கு | ரூ. 1.50 | ரூ. 2.00 |

மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் புதிதாக சேர்க்கப்பட்ட கட்டண விகிதங்கள் எம்.ஜி.ஆர். மார்க்கெட்டில் உள்ள பொருத்தமான இனங்களுக்கு பொருந்தும்.

<u>4. பன்னீர் செல்வம் பூமார்க்கெட்</u>

பன்னீர்செல்வம் பூ மார்க்கெட்டில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| இனம் | 2009-10 ஆம் ஆண்டு கட்டண விபரம் | மாற்றி அமைக்கப்பட்ட கட்டண விபரம் |
|---|---|---|
| 1) கூடை அல்லது 1 கூடை அளவுள்ள தலை சுமை | ரூ.1.50 | ரூ.2.00 |
| 2) பூ பாரம் ஏற்றிய சைக்கிள் 1-க்கு | ரூ.3.00 | ரூ.4.00 |
| 3) கமிஷன் வியாபாரத்திற்கு வரும் பூக்கூடை (சாடு, மக்கரி)-1-க்கு | ரூ.3.00 | ரூ.4.00 |
| 4) சாமந்திப்பூ, அரளிப்பூ, மருகுக்கட்டு அடங்கிய சிறிய கூடை 1-க்கு | ரூ.1.50 | ரூ.2.00 |

## தெற்கு மண்டலம்

1. தியாகி குமரன் மார்க்கெட் மற்றும் இராமர் கோவில் வீதி மார்க்கெட்

| இனம் | 2009-10 ஆம் ஆண்டு கட்டண விபரம் | மாநகர மன்ற தீர்மான எண்.168 நாள்.29.12.2009 ன்படி மாற்றியமைக்கப்பட்ட கட்டண விபரம் |
|---|---|---|
| 1) கூரை போடப்பட்டுள்ள இடத்தில் 6' x 4' மற்றும் அதற்கும் குறைவான இடத்திற்கு | ரூ.12.50 | ரூ. 25.00 |
| 2) கூரை போடாத கடைகள் ஒவ்வொன்றுக்கு 6' x 4' குறைவான இடத்திற்கு | ரூ. 5.00 | ரூ.10.00 |
| 3) வெற்றிலைக்கடை கோட்டை 1-க்கு 10,000 (அ) அதன் பாகத்திற்கு | ரூ. 4.00 | ரூ.10.00 |
| 4) வெற்றிலை சுமை 1-க்கு (6 ஆயிரம் கொண்டது (அ) அதன் பாகம்) | ரூ. 2.00 | ரூ. 5.00 |
| 5) உள்ளூர் வெற்றிலை பலகை 1-க்கு 4 மொத்தை | ரூ. 2.00 | ரூ. 5.00 |
| 6) கீரை வகைகள் தலைச்சுமை 1-க்கு | ரூ. 2.00 | ரூ. 5.00 |
| 7) தலைச்சுமை 1-க்கு நுழைவுக் கட்டணம் (பழங்கள், காய்கறிகள், கிழங்குகள்) | ரூ. 2.00 | ரூ. 5.00 |
| 8) லாரி 1-க்கு நுழைவு கட்டணம் | ரூ.30.00 | ரூ.100.00 |
| 9) இரட்டை மாட்டு வண்டி 1-க்கு நுழைவுக் கட்டணம் | ரூ.10.00 | ரூ.10.00 |
| 10) ஒற்றை மாட்டு வண்டி 1-க்கு நுழைவுக் கட்டணம் | ரூ. 8.00 | ரூ.10.00 |
| 11) டெம்போ 1-க்கு நுழைவுக் கட்டணம் | ரூ.20.00 | ரூ.50.00 |
| 12) மினிடோர் ஆட்டோ 1-க்கு நுழைவுக் கட்டணம் | ரூ.15.00 | ரூ.40.00 |

இக்கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தினசரி மார்க்கெட்டுகளுக்கான 2010-2013 மூன்று ஆண்டுக்கான குத்தகை உரிம இனங்களுக்குரிய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 04.03.2010 அன்று நடைபெற உள்ளது என அறிவிப்பு தினசரி நாளிதழில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தினசரி மார்க்கெட் வியாபாரிகள் மற்றும் வியாபாரிகள் பொதுநல சங்கம் ஆகியோர் கட்டண உயர்வை ஆட்சேபித்தும், மேற்படி கட்டணங்களை குறைக்கக் கோரியும் மற்றும் மாமன்ற தீர்மானத்தை மறுபரிசீலனை செய்து கட்டண உயர்வினை ரத்து செய்யவும் கோரியுள்ளனர். மேலும், திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற உறுப்பினர்களும் கட்டண உயர்வினை மறுபரிசீலனை செய்து மறு நிர்ணயம் செய்து தருமாறு கோரியுள்ளனர்.

எனவே, மேற்படி கட்டண உயர்வு மாமன்ற தீர்மானத்தினை மறுபரிசீலனை செய்யும்பொருட்டு மாமன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்ற பரிசீலனைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.12496/2008/ அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 242 நாள் 2.03.2010**

1. தடாகம் ரோடு வாழைக்காய் மண்டியில் மாநகர மன்ற தீர்மானம் எண்.226. நாள்.29.01.2010ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம்.

அ) வரிசை எண்.5. வாழைத்தார் ஒன்றுக்கு ரூ.1.00 என்பதனைக் குறைத்து வாழைத்தார் ஒன்றுக்கு 50 பைசா என நிர்ணயம் செய்யப்பட்டது. வ.எண் 1, லாரி 1க்கு ரூ. 35/- என நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆ) புதியதாக சேர்க்கப்பட்ட இனம் இரண்டு சக்கர வாகனம் கட்டணம் ரூ.5.00 என்பதனைக் குறைத்து ரூ.2.00 எனவும், கை வண்டி நடை ஒன்றுக்கு ரூ.5.00 என்பதனைக் குறைத்து ரூ.2.00 எனவும் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

இ) இவை தவிர பிற கட்டண விகிதங்களை பொருளில் உள்ளவாறு தொடர அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

2. மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டில் மாநகர மன்ற தீர்மானம் எண்.226. நாள்.29.01.2010ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம்

அ) வரிசை எண்.1. A,B,C,D பிளாக் 5' x 6'க்கு ரூ.15/- என்பதனைக் குறைத்து ரூ.12/- எனவும், வரிசை எண்.2. லாரி நடை 1க்கு ரூ.40/- என்பதனைக் குறைத்து ரூ.35 /- எனவும், வரிசை எண்.9. மொபட், ஸ்கூட்டர் முதலிய வாகனங்களுக்கு ரூ.5 /- என்பதனைக் குறைத்து ரூ.2 /- எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆ) புதியதாக சேர்க்கப்பட்ட இனங்களுக்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

| வ.எண் | இனம் | கட்டணம் |
|---|---|---|
| 1 | தேங்காய் மூட்டை 1க்கு | 1.50 |
| 2 | காய்கறி மூட்டை 1க்கு | 1.50 |
| 5 | பாரம் ஏற்றி வரும் இரண்டு சக்கர வாகனம் நடை 1க்கு | 3.00 |
| 6 | ஆட்டோ நடை 1க்கு | 10.00 |
| 7 | காளி பிளவர் லோடு 1க்கு லாரி | 100.00 |
| | டெம்போ | 75.00 |
| 8 | பூசணிக்காய் லோடு 1க்கு லாரி | 100.00 |
| | டெம்போ | 75.00 |
| 9 | வாழைத்தார் 1க்கு | 0.50 |
| 10 | கை வண்டி நடை 1க்கு | 2.00 |
| 11 | இலை கட்டு 1க்கு | 2.00 |
| 12 | தக்காளி டிப்பர் 25 கிலோ 1க்கு | 2.00 |

இ) புதியதாக சேர்க்கப்பட்ட இனங்களில் பொருளில் வரிசை எண்.3 மற்றும் 4 மளிகை சாமான்கள் அனைத்துக்கும் மூட்டை 1க்கு மற்றும் எண்ணைய், பிஸ்கட், சோப்பு, டின் 1க்கு ஆகியவற்றை நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஈ) இவை தவிர பிற கட்டண விகிதங்களை பொருளில் உள்ளவாறு தொடர அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

3. மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கறி மார்க்கெட் (எம்.ஜி.ஆர்.மார்க்கெட்) மாநகர மன்ற தீர்மானம் எண்.226. நாள்.29.01.2010ன் படி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம்.

அ) வரிசை எண் 1 லாரி நுழைவுக் கட்டணம் ரூ.40/- என்பதனைக் குறைத்து ரூ.35/- எனவும் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. வ.எண். 2 முதல் 7 வரை பொருளில் உள்ள கட்டணம் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

ஆ) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கட்டண விகிதங்கள் மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர். மார்க்கெட்டிற்கு பொருத்தமான இனங்களுக்கு அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

4. பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் மாநகர மன்ற தீர்மானம் எண்.226. நாள்.29.01.2010ன்படி நிர்ணயம் செய்ய ப்பட்ட இனம்

அ) வரிசை எண்.2 பூ பாரம் ஏற்றிய சைக்கிள் 1க்கு ரூ.3.00 எனவும், வரிசை எண்.3 கமிஷன் வியாபாரத்திற்கு வரும் பூக்கூடை (சாடு, மக்கிரி) 1க்கு ரூ.3.50 எனவும் நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

ஆ) இவை தவிர பிற கட்டண விகிதங்களை பொருளில் உள்ளவாறு தொடர தீர்மானிக்கப்பட்டது.

5. மாநகர மன்ற தீர்மானம் எண்.168. நாள்,29.12.2009ன் படி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தியாகிக் குமரன் மார்க்கெட் மற்றும் இராமர் கோவில் வீதி மார்க்கெட்டில் கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

அ) இனம்

| வ.எண் | இனம் | கட்டணம் |
|---|---|---|
| 1 | கூரை போடப்பட்டுள்ள இடத்தில் 6’x 4’ மற்றும் அதற்கும் குறைவான இடத்திற்கு | 20.00 |
| 2 | கூரை போடாத கடைகள் ஒவ்வொன்றுக்கு 6’x 4’ அதற்கும் குறைவான இடத்திற்கு | 10.00 |
| 3 | வெற்றிலைக் கடை கோட்டை 1க்கு 10,000 (அ) அதன் பாகத்திற்கு | 8.00 |
| 4 | வெற்றிலை சுமை 1க்கு (6ஆயிரம் கொண்டது (அ) அதன் பாகம்) | 3.00 |
| 5 | உள்ளூர் வெற்றிலை பலகை 1க்கு 4 மொத்தை | 2.00 |
| 6 | கீரை வகைகள் தலைச்சுமை 1க்கு | 2.00 |
| 7 | தலைச்சுமை 1க்கு நுழைவுக் கட்டணம் (பழங்கள், காய்கறிகள், கிழங்குகள்) | 2.00 |
| 8 | லாரி 1க்கு நுழைவுக் கட்டணம் | 35.00 |
| 9 | இரட்டை மாட்டு வண்டி 1க்கு நுழைவுக்கட்டணம் | 8.00 |
| 10 | ஒற்றை மாட்டு வண்டி 1க்கு நுழைவுக்கட்டணம் | 8.00 |
| 11 | டெம்போ 1க்கு நுழைவுக் கட்டணம் | 20.00 |
| 12 | மினிடோர் ஆட்டோ 1க்கு நுழைவுக் கட்டணம் | 15.00 |

ஆ) இவை தவிர பிற கட்டண விகிதங்களை பொருளில் உள்ளவாறு தொடர தீர்மானிக்கப்பட்டது.

6. லாரி, டெம்போ, ஆட்டோ, மினிடோர் ஆட்டோ, கைவண்டி, இரு சக்கர வாகனம் முதலிய அனைத்து வாகனங்களுக்கும் கட்டணம் நடை 1க்கு என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்து தீர்மானிக்கப்பட்டது.

7. அனைத்துக் கட்டண விகிதங்களையும் 5 ஆண்டுக்கு ஒருமுறை உயர்வு செய்து மறு நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

8. இக்கட்டண விகிதங்களை 1.4.2010 முதல் அமலுக்கு கொண்டு வரவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி